# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## க.பொ.த உயர்தர மாதிரிப் பரீட்சை 1 - 2020

## கிறிஸ்தவநாகரிகம் II

சுட்டெண் : ...............                                   நேரம் : 3.00 மணித்தியாலம்

**அறிவுறுத்தல்கள் : பகுதி 1இலிருந்து இரண்டு வினாக்களையும், பகுதி 11இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி 1

1. (i) யூதகலாசாரத்தின் மீது எகிப்திய நாகரிகங்கள் செலுத்திய தாக்கங்கள் நான்கினைத் தருக.
   (ii) கிரேக்க, உரோமைய நாகரிகங்கள் கிறிஸ்தவ நாகரிகத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் நான்கினை விபரிக்குக.
   (iii) திருச்சபை கிரேக்க மொழியைப் பயன்படுத்தியமையால் கிடைத்த நன்மைகள் நான்கைக் குறிப்பிடுக.
   (iv) திருச்சபை இலத்தீன் மொழியைப் பயன்படுத்தியமையால் கிடைத்த நன்மைகள் நான்கைக் குறிப்பிடுக.
   (v) உரோமர்களின் கட்டடக்கலையின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டுகள் நான்கும், பசிலிக்கா கட்டிட அமைப்பு முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்ட ஆலயங்கள் நான்கையும் குறிப்பிடுக.

2. (i) புறவினத்தார் குறித்து நற்செய்தியில் காணப்படும் குறிப்புகள் நான்கு தருக.
   (ii) மிஸ்னா நூலிலுள்ள யூததலைமைச்சங்க விதிமுறைகள் நான்கை எழுதுக
   (iii) இயேசுவின் புதுமைகளை உதாரணம் தந்து வகைப்படுத்துக.
   (iv) பாதம் கழுவுதல் சடங்கு மூலம் யோவான் வெளிப்படுத்தும் செய்திகள் நான்கைக் குறிப்பிடுக.
   (v) பவுல் மறைத்தூதுப்பயணத்தில் சென்ற இடங்கள் நான்கையும், கொரிந்து திருச்சபைக்கு தனது திருமடல் மூலமாக முன்வைத்த படிப்பினைகள் நான்கையும் எழுதுக.

3. (i) மிலான்சாசனத்தின் உறுப்புரைகள் நான்கினைக் குறிப்பிடுக.
   (ii) தப்பறையான போதனைகளால் (பேதகங்கள்) ஏற்பட்ட விளைவுகள் நான்கைக் குறிப்பிடுக.
   (iii) திருச்சபை கீழைத்தேயம், மேலைத்தேயம் எனப்பிளவுற்றதால் ஏற்பட்ட விளைவுகள் நான்கு தருக.
   (iv) தூய யோசவ்வாஸின் மறைபரப்புச் செயன்முறைகளிலிருந்து இலங்கைத் திருச்சபை பெற்றுக் கொள்ளக் கூடிய நான்கு படிப்பினைகளைக் குறிப்பிடுக.
   (v) இயேசு சபையினரின் கல்விச் செயற்பாட்டில் காணப்பட்ட சிறப்பம்சங்கள் நான்கு தருக.

## பகுதி 11

4. (i) தூய பவுல் கிறிஸ்தவ குடும்பத்தில் இருக்கவேண்டிய கடமைகள், பொறுப்புக்கள் பற்றி எபேசிய திருச்சபைக்கு வலியுறுத்தும் கருத்துக்களை விளக்குக.
   (ii) “கிறிஸ்தவகுடும்பம் அன்பினதும் ஒற்றுமையினதும் உறைவிடம்” என்ற சிந்தனைக்கு எதிராக இன்றைய குடும்பவாழ்வில் ஏற்படும் சவால்களை விளக்குக.

5. (i) மலைப்பொழிவின் மூலம் முன்வைக்கப்படும் குறிக்கோள்கள் ஐந்தினை விபரிக்குக.
   (ii) தூய உள்ளத்தவர்களாக நாம் வாழ்வதற்கு எத்தகைய தன்மைகளைக் கொண்டு இருக்க வேண்டும் என்பதனை விளக்குக.

6. (i) நிசெயா பொதுச்சங்கம் கூட்டப்பட ஏதுவான காரணத்தையும், இச்சங்கம் கூட்டப்பட்டதால் கத்தோலிக்க திருச்சபையின் எதிர்பார்ப்பு எவ்வளவுதூரம் கைகூடியது என்பதனையும் விளக்குக.
   (ii) வேதகலாபனைக்காலத்தில் கிறிஸ்தவர்கள் மத்தியில் மிளிர்ந்த பண்புகள் ஐந்தினைக் குறிப்பிட்டு, இன்றைய சமூகத்தில் நீர் எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகம் கொடுக்கும் விதத்தை மேற்கூறிய விசேட பண்புகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

7. (i) ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் வழக்கிலிருந்த பாடசாலை முறைகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றைப் பற்றி விபரிக்குக.
   (ii) ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் கல்வித்துறையில் ஏற்பட்ட மாற்றங்களை விபரிக்குக.

8. (i) கிறிஸ்தவ ஒன்றிப்பை ஏற்படுத்துவதில் கத்தோலிக்க திருச்சபையின் பங்களிப்புகளை விபரிக்குக.
   (ii) இலங்கையில் கத்தோலிக்க ஒன்றிப்பை விருத்தி செய்வதில மாணவரொருவர் வழங்கத்தக்க பங்களிப்புகள் பற்றி விளக்குக.

## புள்ளித்திட்டம்
## கிறிஸ்தவநாகரிகம் 11

1. (i) **யூதகலாசாரத்தின் மீது எகிப்திய நாகரிகங்கள் செலுத்திய தாக்கங்கள் நான்கினைத் தருக.**
   - மரணத்தின் வாழ்வு உண்டு என்ற நம்பிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது
   - ஆட்சிஉரிமை தந்தையிடமிருந்து மகனுக்குக் கிடைப்பதாகக் கருதப்பட்டு கைமாறப்பட்டது
   - விவசாய நடைமுறைகள் பின்பற்றப்பட்டன
   - அரசன் தெய்வ அதிகாரம் பெற்றவர் என்ற நம்பிக்கை
   - ஆட்சி நிர்வாக முறை

(ii) **கிரேக்க, உரோமைய நாகரிகங்கள் கிறிஸ்தவ நாகரிகத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் நான்கினை விபரிக்குக**

**கிரேக்க நாகரிகம்:**
- திருவிவிலியத்தில் கிரேக்கமொழி
- கிரேக்க கட்டடக்கலைகள்
- கிரேக்க மெய்யியல்
- கிரேக்க வாழ்க்கை முறை

**உரோமைய நாகரிகம்**
- திருவிவிலயத்தில் இலத்தீன் மொழி
- உரோமைய கட்டடக்கலைகள்
- சமூக நிர்வாக முறைகள்
- வழிபாட்டு முறைகள்

(iii) **திருச்சபை கிரேக்க மொழியைப் பயன்படுத்தியமையால் கிடைத்த நன்மைகள் நான்கைக் குறிப்பிடுக**
- பழைய ஏற்பாடு கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டமை
- திருத்தூதர்களும், ஆரம்பக்கிறிஸ்தவர்களும் கிரேக்கமொழிபெயர்ப்பை அதிகம் பயன்படுத்தியமை
- கிரேக்கமொழியில் பழையஏற்பாட்டு நூல்கள் சில ( மக்கபேயர் 1, 11, ஞானநூல்கள்), நற்செய்தி நூல்கள், திருமடல்கள் எழுதப்பட்டமை
- யோவான், பவுல் தமது இறையியலை விளக்குவதற்கு கிரேக்க மொழியைப் பயன்படுத்தியமை
- திருச்சபைத் தந்தையர்கள் கிரேக்கமொழியில் இலக்கியங்களை உருவாக்கியமை

(iv) **திருச்சபை இலத்தீன் மொழியைப் பயன்படுத்தியமையால் கிடைத்த நன்மைகள் நான்கைக் குறிப்பிடுக**
- திருவிவிலியம் இலத்தீன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டமை
- பல கிறிஸ்தவ இலக்கியங்கள் இலத்தீன் மொழியில் எழுதப்பட்டமை
- திருச்சபையின் நிர்வாகமொழியாக, ஆட்சிமொழியாக இலத்தீன் மொழி விளங்கியமை
- திருத்தந்தையால் வெளியிடப்படும் அறிக்கைகள் இலத்தீன் மொழியில் வெளியிடப்பட்டமை
- குருமட மாணவர்களுக்கு போதனா மொழியாக விளங்கியமை
- 2ம் வத். சங்கம் வரை வழிபாட்டு மொழியாக விளங்கியமை

(v) **உரோமர்களின் கட்டடக்கலையின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டுகள் நான்கும், பசிலிக்கா கட்டிட அமைப்பு முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்ட ஆலயங்கள் நான்கையும் குறிப்பிடுக.**
- பொதுப்பாதைகள்
- பாலங்கள்
- அணைக்கட்டுகள்
- துறைமுகங்கள்
- களியாட்ட அரங்குகள்
- நீர்த்தேக்கங்கள்

கொன்ந்தாந்துநோபிள் - தூயஆவியின் பெயரால் ஆலயம்
கல்வாரிமலை - கல்லறை ஆலயம்
ஒலிவமலை - ஆரோபண ஆலயம்
பெத்தலகேம் - கிறிஸ்து பிறப்பு ஆலயம்

2. (i) **புறவினத்தார் குறித்து நற்செய்தியில் காணப்படும் குறிப்புகள் நான்கு தருக.**
   - இயேசுவின் பிறப்பின் போது அவரைத் தரிசிக்க வந்த கீழ்த்திசை ஞானிகள் (மத். 2: 1 – 12)
   - எருசலேம் ஆலயத்தில் சிமியோன் குழந்தையைக் கையிலேந்தி இம்மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி எனும் வார்த்தைகள் ( லூக். 2: 25 – 35)

- சமாரியப் பெண்ணுடன் உரையாடல் ( யோவா. 4: 1 – 42)
- பத்துத் தொழுநோயாளர் குணம்பெறல் (லூக். 17 : 11 – 19)
- நல்ல சமாரியன் உவமை ( லூக். 10: 25 – 37

**(ii) மிஸ்னா நூலிலுள்ள யூததலைமைச்சங்க விதிமுறைகள் நான்கை எழுதுக**
- இச்சங்கம் அதற்கென அமைக்கப்பட்ட மண்டபத்திலேயே கூட்டப்பட வேண்டும்
- திருவிழாக்காலங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பகல்வேளையில் கூட்டப்பட வேண்டும்
- மதம் தொடர்பான குற்றங்களை விசாரணை செய்ய இது கூட்டப்பட வேண்டும்
- குற்றவாளி தொடர்பாக இரண்டு சாட்சியங்கள் தனித்தனியாக விசாரிக்கப்பட வேண்டும்
- குற்றம் சாட்டப்பட்டவரின் வாய்மூலத்தை வைத்து தீர்ப்பிடக்கூடாது
- சாட்சியங்கள் இரண்டும் ஒரே மாதிரி அமைந்திருந்தால் மாத்திரமே தண்டிக்கப்படலாம்
- விடுதலைத் தீர்ப்பாயின் அன்றைய தினமே விடுதலை செய்யப்பட வேண்டும்
- மரணதண்டனையாயின் இரு நாட்களின் பின்னரே நிறைவேற்றப்பட வேண்டும்

**(iii) இயேசுவின் புதுமைகளை உதாரணம் தந்து வகைப்படுத்துக**
- இயற்கை தொடர்பானவை – ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல், நீரை இரசமாக்குதல்
- குணமளித்தல் - பத்துத் தொழுநோயாளர் குணமடைதல், உடல்நலமற்றவர்
- தீய ஆவியை விரட்டுதல் - கெரசேனர் பகுதியில் பேய் பிடித்த ஒருவரை நலமாக்குதல்
- இறந்தவர்களை உயிர்ப்பித்தல் - நயீன் கைம்பெண்ணின் மகன், ஜாயிரின் மகள் உயிர்பெறுதல;

**(iv) பாதம் கழுவுதல் சடங்கு மூலம் யோவான் வெளிப்படுத்தும் செய்திகள் நான்கைக் குறிப்பிடுக**
- இயேசு ஒரு அடிமையின் வேலையைச் செய்து இறையாட்சிப்பணிக்கு முன்மாதிரிகை காட்டினார்
- இறையாட்சிப்பணி இயேசுவைப் போல இறையன்பை வெளிப்படுத்தும் செயற்பாடாக அமையவேண்டும்
- உள்ளத்தில் இறையன்பு இல்லையேல் ஒரு சீடன் தன்னை வெறுமையாக்க முடியாது
- இயேசுவின் தலைமைத்துவம் தாழ்மையான பணித்தலைமைத்துவமாகும்
- இறையாட்சிப் பணிக்கு உள்ளத்தூய்மை தேவை

**(v) பவுல் மறைத்தூதுப்பயணத்தில் சென்ற இடங்கள் நான்கையும், கொரிந்து திருச்சபைக்கு தனது திருமடல் மூலமாக முன்வைத்த படிப்பினைகள் நான்கையும் எழுதுக.**

**சென்ற இடங்கள்**
- சைப்பிரஸ்தீவு, பிசிதியா அந்தியோக்கியா, இக்கோனியா, லிஸ்திரா, தெருபை
- துரோவா, பிலிப்பி, பெரேயா, தெசலோனிக்கா, எதென்ஸ், கொரிந்து, எபேசு
- மிலேத்து, செசாரியா

**படிப்பினைகள்**
- கிறிஸ்தவ குடும்பம்
- கிறிஸ்தவ ஒற்றுமை
- கிறிஸ்தவ சகோதரத்துவம்
- தூயஆவியில் வாழ்வு

**3. (i) மிலான்சாசனத்தின் உறுப்புரைகள் நான்கினைக் குறிப்பிடுக**
- திருச்சபைக்கு மறைச்சுதந்திரம் வழங்கப்பட்டது
- குருக்கள் வரிசெலுத்தத் தேவையில்லை
- ஞாயிறுநாட்களில் ஊதியம் பெறும் எந்தவித வேலையும் செய்யக் கூடாது
- சிலுவையில் அறைந்து குற்றவாளிகள் கொல்லப்படுவது நிறுத்தப்பட்டது
- ஆயர்களின் அதிகாரம் ஏற்றுக் கொள்ளப்பட்டது

**(ii) தப்பறையான போதனைகளால் (பேதகங்கள்) ஏற்பட்ட விளைவுகள் நான்கைக் குறிப்பிடுக**
- தப்பறைகள் கிறிஸ்தவ உண்மைகளை பெலவீனப்படுத்துவதற்குப் பதிலாக அதன் உள்ளார்ந்த முதிர்ச்சிக்கும் இறையியல் வளர்ச்சிக்கும் உதவியாக அமைந்தன
- கிறிஸ்தவ நம்பிக்கைகள் ஒவ்வொன்றும் விரிவாக ஆராயப்பட வழிவகுக்கப்பட்டது
- பொதுச்சங்கங்களைக் கூட்டி அனைத்து ஆயர்களின் அறிவையும், அனுபவங்கயையும் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது.

- திருவிவிலியத்தை கிறிஸ்தவர்கள் ஆழமாகப் படிக்கத் தூண்டியது
- கிறிஸ்தவ நம்பிக்கை, கோட்பாடுகள் உருவாக வழி சமைத்தன

**(iii) திருச்சபை கீழைத்தேயம் மேலைத்தேயம் எனப்பிளவுற்றதால் ஏற்பட்ட விளைவுகள் நான்கு தருக**

- தொடர்பாடலுக்குரிய தனிமொழி பயன்பாடு அதிகரித்தது
- கலாசார தனித்துவங்கள் ( கிரேக்க, இலத்தீன் ) அடையாளப்படுத்தப்பட்டன
- கிறிஸ்தவம் கீழைத்தேயத்திலும், மேலைத்தேயத்திலும் வேறுபட்ட வரலாற்றுப் பின்புலங்களில் வளர்ந்தன
- வேறுபட்ட வழிபாட்டு முறைகளில் வளர்ந்தன
- வேறுபட்ட இறையியல் கோட்பாடுகள் தோன்றி வளர்ந்தன.

**(iv) தூய யோசவ்வாஸின் மறைபரப்புச் செயன்முறைகளிலிருந்து இலங்கைத் திருச்சபை பெற்றுக் கொள்ளக் கூடிய நான்கு படிப்பினைகளைக் குறிப்பிடுக.**

- யோசவ்வாஸ் அடிகளாரின் ஆழ்ந்த அர்ப்பணமும், கடினஉழைப்பும், தியாகசிந்தனையும்
- தனக்காக வாழாது பிறருக்காக வாழுதல்
- கடின துன்பங்கள் மத்தியிலும் இறைமகிமையைத் தேடுதல்
- சுதேச பண்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்
- அவரது புனிதமான எடுத்துக்காட்டான வாழ்வு
- பொதுநிலையினருக்கு முக்கியத்துவம் அளித்தல்

**(v) இயேசு சபையினரின் கல்விச் செயற்பாட்டில் காணப்பட்ட சிறப்பம்சங்கள் நான்கு தருக**

- மீண்டும் மீண்டும் சொல்லிக்கொடுத்தல் முறை
- வினாவிடை முறை
- நாடகங்கள், கட்புலன் செவிப்புலன் ஆகிய முறைகளைப் பயன்படுத்துதல்
- மதக்கல்வியோடு ஏனைய பாடவிடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்குதல்
- ஞானகீத இசைப்பின் மூலம் விடயங்களை வலியுறுத்தல்

**4. (i) தூய பவுல் கிறிஸ்தவகுடும்பத்தில் இருக்கவேண்டிய கடமைகள், பொறுப்புக்கள் பற்றி எபேசிய திருச்சபைக்கு வலியுறுத்தும் கருத்துக்களை விளக்குக.**

**கணவன்**

- கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாய் இருப்பது போல கணவன் மனைவிக்கு தலையாக இருக்கவேண்டும். ஆனால் இத்தலைமைத்துவம் அதிகாரத்தால் அல்ல அன்பினால் ஆனதாக இருக்க வேண்டும்
- கிறிஸ்து திருச்சபையை எவ்வித குறைகளின்றி அன்பு செய்தது போல கணவனும் தன் மனைவியை அன்பு செய்ய வேண்டும்
- கணவன் தன் உடலை அன்பு செய்வது போல தன் மனைவியையும் அன்பு செய்ய வேண்டும்
- கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டு தன் மனைவியுடன் ஒன்றித்து வாழ வேண்டும்

**மனைவி:**

- திருச்சபை கிறிஸ்துவிற்குப் பணிந்திருப்பது போல மனைவி கணவனுக்கு பணிந்திருத்தல்

**பெற்றோரின் கடமைகள்:**

- பெற்றோர் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாது அவர்களை ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்துத் திருத்தி, அறிவு புகட்டி வளர்க்க வேண்டும்.

**பிள்ளைகளின் கடமைகள்:**

- பெற்றோருக்கு கீழ்ப்படிய வேண்டும்.
- தந்தையையும் தாயையும் மதித்து நடப்பதனால் நலம் பெற்று மண்ணுலகில் நீடூழி வாழ்வார்கள்.

**(ii) “கிறிஸ்தவகுடும்பம் அன்பினதும் ஒற்றுமையினதும் உறைவிடம்” என்ற சிந்தனைக்கு எதிராக இன்றைய குடும்பவாழ்வில் ஏற்படும் சவால்களை விளக்குக**

1கொரி. 7 : 1- 16, எபே. 5: 22- 6: 4, கலா. 3: 28 இத்திருமடல்களில் காணப்படும் கருத்துக்களை சுருக்கமாக விளக்குதல்

- இன்றைய குடும்பவாழ்வில் கணவன் மனைவிக்கிடையில் புரிந்துணர்வின்மை
- இருவரும் தமக்குரிய கடமைகளை சரிவர நிறைவேற்றாமை
- பிள்ளைகளை கண்டித்து திருத்தி வளர்க்காமை
- பிள்ளைகளும் பெற்றோரை மதிக்காமை

- பெற்றோருக்கு கீழ்ப்படிந்து வாழாமை
- தமது கடமைகளை நிறைவேற்றாமை

**5. (i) மலைப்பொழிவின் மூலம் முன்வைக்கப்படும் குறிக்கோள்கள் ஐந்தினை விபரிக்குக**

- திருத்தூதர்களின் அறநெறிகள் மறைநூல் அறிஞர், மற்றும் பரிசேயரின் அறநெறிகளை விட மேலானது
- இயேசு புதிய மோசேயாக புதிய சட்டத்தைக் கொடுத்துள்ளார்.
- பழைய சட்டங்கள் அனைத்தும் இயேசுவின் புதிய சட்டத்தில் நிறைவு பெற்றன.
- ஏழையரின் உள்ளத்தோராய், கனிவுடையோராய், நீதியும் நேர்மையும் கொண்டவர்களாய், இரக்கமுடையவர்களாய் வாழ்தல் வேண்டும்.
- மனித உள்ளங்களில் உள்ள தீய குணங்கள் அகற்றப்பட்டு தூய்மையோடு வாழ வேண்டும்.
- இறையரசின் சாட்சிகள் மண்ணுலகில் உப்பாகவும், ஒளியாகவும் திகழ வேண்டும்.
- அடுத்தவர்களுடன் கொள்ளும் உறவில் சினங்கொள்ளுதல், விபசாரம், ஆணையிடுதல், பழிவாங்குதல். போன்ற செயல்களைத் தவிர்த்து பகைவர்களிடம் அன்பு கொள்வதை, அவர்களுக்காக செபிப்பதனை வாழ்வாகக் கொள்ள வேண்டும்.
- செபம், நோன்பு, தருமம் செய்தல் போன்றவற்றை பிறர் பார்க்க வேண்டும் எனச் செய்யாது உள்ளன் போடு நிறைவோடு செய்ய வேண்டும்.
- செப வாழ்வில் நிலைத்திருப்பவர்களாக இருக்க வேண்டும்.

**(ii) தூய உள்ளத்தவர்களாக நாம் வாழ்வதற்கு எத்தகைய தன்மைகளைக் கொண்டு இருக்க வேண்டும் என்பதனை விளக்குக.**

- நாம் தூய உள்ளத்தவர்களாக இருக்க வேண்டுமெனில் நல்ல நோக்கோடு மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.
- சுயகௌரவம், சுயதிருப்தி போன்றவற்றுக்காக வாழ்பவர்களுக்கு இயேசு தூய உள்ளத்தோரே கடவுளைக் காண்பர் என்கிறார்.
- உள்ளத்தில் தீமையை நினைப்பவன் ஏற்கனவே பாவம் செய்து விட்டான் (மத். 5: 28) எனக் கூறு கின்றார்.
- தூய்மையாக வாழ்வதற்கு ஆழமான நேர்மை, உண்மை, கடவுளை நாடி வாழும் தன்மை வேண்டும்.
- அயலவரோடு நாம் கொள்ளும் உறவு தூய்மையானதாக அமைய வேண்டும்.
- இயேசு எவ்வாறு வாழ்ந்தாரோ அதாவது இயேசு போதித்தவற்றை வாழ்ந்தார். நாமும் அவ்வாறு வாழ வேண்டும்.
- இயேசுவின் வெளிவாழ்வும் உள்வாழ்வினைப் போன்றிருந்தது.
- நாமும் இறைவனோடு சகமனிதர்களோடு கொண்டுள்ள உறவு இரண்டிலும் தூய்மையாக இருக்க வேண்டும்.
- எனவே கிறிஸ்தவ விழுமியங்களைக் கடைப்பிடித்து வெளிவேடம் இல்லாமல் உள்ளத்தூய்மையுடன் வாழும் போது இயேசு குறிப்பிட்டது போல தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பவர் ஆகலாம்.

**6. (i) நிசெயா பொதுச்சங்கம் கூட்டப்பட ஏதுவான காரணத்தையும், இச்சங்கம் கூட்டப்பட்டதால் கத்தோலிக்க திருச்சபையின் எதிர்பார்ப்பு எவ்வளவுதூரம் கைகூடியது என்பதனையும் விளக்குக**

- நிசெயா பொதுச்சங்கம் கூட்டப்பட ஏதுவான காரணம் ஆரியவாதம் ஆகும்.
- வார்த்தை கடவுளிலும் கீழானவர் என்பது ஆரியுசின் வாதமாகும்.
- இவர் கிரேக்க மெய்யியலின் துணையுடன் இதனை விளக்க இயேசு கடவுள் அல்ல என்றார்.
- இயேசு உண்மையாகவே கடவுளின் மகன் என்றால் மகன் இல்லாத காலம் ஒன்று இருந்திருக்க வேண்டும்.
- எனவே மகன் தந்தைக்கு சமமானவர் அல்ல ஒரே பொருளானவர் அல்ல, நித்தியமானவர் அல்ல என்று போதித்து வந்தார்.
- எனவே ஆரியவாதத்தை ஆராய நிசேயா என்னுமிடத்தில் ஒரு திருச்சங்கம் கி.பி. 325இல் கூட்டப்பட்டது.
- இச்சங்கத்தில் ஆரியவாதம் கண்டிக்கப்பட்டு கிறிஸ்து கடவுள், தந்தைக்கு சமமானவர், நித்தியமானவர், ஒரே பொருளானவர் என வலியுறுத்தப்பட்டு அவை நம்பிக்கைக் கோட்பாடாக பிரகடனம் செய்யப்பட்டது.
- ஆரியுசும் திருச்சபையிலிருந்து நீக்கப்பட்டார்.
- இந்த நம்பிக்கை அறிக்கையை திருப்பலியில் நாம் சொல்லுகிறோம்.
- இது திருச்சபையின் விசுவாச உண்மையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**(ii) வேதகலாபனைக்காலத்தில் கிறிஸ்தவர்கள் மத்தியில் மிளர்ந்த பண்புகள் ஐந்தினைக் குறிப்பிட்டு, இன்றைய சமூகத்தில் நீர் எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகம் கொடுக்கும் விதத்தை மேற்கூறிய விசேட பண்புகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.**

**பண்புகள்:**

- துன்பங்களுக்கு அஞ்சாது முகங்கொடுத்தல்
- நிலையற்ற செல்வங்களில் பற்று வைக்காது இறைவனில் நிலைத்திருத்தல்
- கஷ்டங்கள், வேதனைகள் வரும் போது முதலாம் கட்டளைக்கு எதிரான செயல்களை மேற்கொள்ளாதிருத்தல்
- தங்கள் உயிரிலும் மேலாக இறைவார்த்தைக்கு ( திருவிவிலியத்திற்கு ) முதலிடம் கொடுத்தல்
- நிலையற்ற இவ்வுலகை விட நிலையான விண்ணுலகைப் பற்றிய நம்பிக்கையில் நிலைத்திருத்தல்
- உண்மை, நேர்மை போன்ற பண்புகளை வாழ்வில் கடைப்பிடித்தல்

**சவால்களுக்கு முகம் கொடுத்தல்**

- ஏனைய சமயப்பிரிவினரின் எதிர்ப்புகளால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் மத்தியிலும் தைரியமாக இருத்தல்
- சினிமா, கையடக்கத்தொலைபேசி, இன்னும் எமது வாழ்வில் செல்வாக்குச் செலுத்தும் நவீன சமூகத் தொடர்பு சாதனங்களில நேரத்தை செலவிடாது இறைவனில் என்றும் நிலைத்திருத்தல்
- இறைவனை மறுதலிக்கக் கூடிய சந்தர்ப்பங்களான சோதிடம் பார்த்தல், பில்லி சூனிய செயல்களில் ஈடுபடல், செல்வத்தில் அதிக பற்று வைத்திருத்தல் போன்றவற்றை விலக்குதல்
- வேதத்தை மறுதலிக்கும் சந்தர்ப்பங்களில் உயிரிழப்புக்களை சந்திக்கத் துணிந்தாலும் வேதாகமத்தைப் பாதுகாத்தல்
- இறைவனின் வருகைக்கு எம்மைத் தயார் செய்தல் வேண்டும். அதற்காக விண்ணக பேரின்பத்தை சுவைக்க இவ்வுலகில் எம்மைத் தயார் செய்தல் வேண்டும்.
- உயிரை இழக்க நேரிடினும் இறையாட்சியின் மதிப்பீடுகளை எம் வாழ்வில் பிரதிபலிக்க வேண்டும்.

**7. (i) ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் வழக்கிலிருந்த பாடசாலை முறைகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றைப் பற்றி விபரிக்குக**

**- ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் நான்குவிதமான பாடசாலைகள் இயங்கின**

1. கோவிற்பற்றுப் பாடசாலைகள்
2. செமினரிப் பாடசாலைகள்
3. ஒல்லாந்தப் பாடசாலைகள்
4. அனாதை இல்லப் பாடசாலைகள்

**1. கோவிற்பற்றுப் பாடசாலைகள்:**

- இப்பாடசாலைகள் போர்த்துக்கேயர் காலத்தில் உருவாக்கப்பட்டு ஒல்லாந்தர் ஆட்சியிலும் அவர்களால் முன்னெடுக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டது.
- அரசபிரமாணங்கள் வழியாக பாடசாலையில் பணிபுரிந்த ஆசிரியர்களுக்குரிய வேலைநேரம், பயிற்சி, கடமைகள் தெளிவூட்டப்பட்டன
- தலைமை ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டடார்
- தோம்புப் பதிவு முறைகள் மேற்கொள்ளப்பட்டன
- சுதேச மொழி கையாளப்பட்டது.
- கட்டாயக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு 8 – 15 வயது வரை பிள்ளைகள் பாடசாலை செல்லக் கட்டாயப்படுத்தப்பட்டனர்
- மேற்பார்வை முறை முக்கிய இடம் பெற்றது
- வினாவிடை முறை
- பரிசில்கள் வழங்கப்பட்டன

**(ii) ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் கல்வித்துறையில் ஏற்பட்ட மாற்றங்களை விபரிக்குக**

- ஆங்கிலமொழி உலகமட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்த மொழியாகக் கணிக்கபட்டது. இதனால் இலங்கையிலும் அதிகமானோர் ஆங்கிலத்தைக் கற்கத் தொடங்கினர்
- ஆங்கிலேயர் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற போது அவற்றை அங்கிலிக்கன், பப்டிஸ்ட், வெஸ்லியன், அமெரிக்கன் மிஷன் குருக்களைக் கொண்ட குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டன.
- மூன்றுவிதமான பாடசாலைகள் - அரச பாடசாலைகள், மிஷன் பாடசாலைகள், பிரிவெனாப் பாடசாலைகள் - இயங்கி வந்தன

- சாதிசமய வேறுபாடுகளின்றி அனைவரும் ஒன்றாகக் கற்க வாய்ப்பு ஏற்பட்டது
- பெண்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை செலுத்தப்பட்டது
- விஞ்ஞான மருத்துவக்கல்வி புகட்டப்பட்டது
- பாடசாலைக்கல்வி மறையறிவைப் பரப்பும் ஊடகங்களாக செயற்பட்டன
- இக்காலத்தில் கிறிஸ்தவ சபையின் சார்பாக பல்வேறுபட்ட சபையினரும் (அங்கிலிக்கன், பப்டிஸ்ட், வெஸ்லியன் , அமெரிக்கன் மிஷன்) கத்தோலிக்க சபை சார்பாக பல்வேறுபட்ட ஆண்பெண் துறவற சபையினரும் வருகை தந்தனர்
- இவர்களால் பல பாடசாலைகள் தோற்றம் பெற்றன
- அச்சியந்திரத்தின் அறிமுகம் - கல்வியை மேலும் மேம்படுத்தின

**8. (i) கிறிஸ்தவ ஒன்றிப்பை ஏற்படுத்துவதில் திருச்சபையின் பங்களிப்புகளை விபரிக்குக.**

**கத்தோலிக்க திருச்சபையின் பங்களிப்பு**

- இரண்டாம் வத்திக்கான் சங்கம் 16 ஏடுகளில் கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய விதித்தொகுப்பு கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிப் பேசுகின்றது
- 1949இல் கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய சுற்று மடல் கத்தோலிக்க திருச்சபையால் வெளியிடப்பட்டமை
- திருத்தந்தை 23ம் யோவான் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான புதிய ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் கத்தோலிக்க திருச்சபையில் ஏற்படுத்தினார்
- திருத்தந்தை 6ம் பவுல் கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக பல முயற்சிகளை மேற்கொண்டார்
- இரண்டாம் வத்திக்கான சங்கத்தில் அனைத்து சபைகளுக்கும் அழைப்பு விடப்பட்டமை
- கத்தோலிக்க ஆயர் பேரவையின் வழிநடத்துதலில் இயங்கும் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான ஆணைக்குழு செயற்படுதல்
- மறைபரப்பு நாடுகளில் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான ஒத்துழைப்பு வழங்கி வருகின்றமை
- விவிலியம் பொதுமொழி பெயர்ப்பு
- திருத்தந்தை 15ம் பெனடிற் - கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம்
- க.பொ.த. உயர்தரவகுப்புக்களில் பொதுவாக கிறிஸ்தவம், கிறிஸ்தவநாகரிகம் பாடங்கள் அறிமுகப்படுத்தப் பட்டு செயற்பட்டு வருகின்றமை
- சமூக நலன்புரிநிலையங்கள் மூலம் இனமதபேதமற்ற பணிகள் முன்னெடுத்தல்
- சமய உரையாடல்களை வளர்க்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டமை

**திருச்சபையின் பங்களிப்பு**

- பவுல்வாட்சன் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம்.
- 1974இல் தென்னிந்தியத் திருச்சபைகள் ஒன்றிணைந்தமை.
- உலக கிறிஸ்தவ சம்மேளனம் கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக செயற்படல்.

**(ii) இலங்கையில் கத்தோலிக்க ஒன்றிப்பை விருத்தி செய்வதில் மாணவரொருவர் வழங்கத்தக்க பங்களிப்புகள் பற்றி விளக்குக.**

- கிறிஸ்தவ ஒன்றிப்புப் பற்றிக் கலந்துரையாடல்
- ஒன்றிப்பு வாரத்தை நடைமுறைப்படுத்தல்
- ஏனைய கிறிஸ்தவ சபைகளுக்கு மதிப்பளித்தலும், அச்சபைகளின் செயற்பாடுகளை மதித்தலும்
- பல்வேறு சபைசார்ந்த இறையியலாளர்கள் ஒன்றிணைந்து இறைவேண்டல், சடங்குமுறைகள், விவிலிய விளக்கங்கள் என்பவற்றில் ஒற்றுமையை உருவாக்கல்
- பாடசாலைகளில் சமய வழிபாடுகளை பொதுமைப்படுத்தல்
- ஏனைய சபையினரைப் பற்றி தெரிந்திருத்தல், அவர்களுடன் நல்லுறவுடன் பழகுதல், அவர்களது நம்பிக்கைகள், நடைமுறைகளைப் பற்றி அவர்கள் மனதைப் புண்படுத்தும் விமர்சனங்களைத் தவிர்த்தல்
- அவர்கள் சமய விழாக்கள் பல்வேறு நிகழ்வுகள், இன்பதுன்பங்களில் கலந்து கொள்ளுதல்
- பொதுவிவிலிய மொழிபெயர்ப்பை மாணவர்கள் பாவித்தல்
- சமூக நலப்பணிகளில் ஒன்றித்து செயற்படுதல்